நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண்.151/2021

அரசு தரப்புக்காக அ.சா.2 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சத்யா | தொழில்/ பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W. 2 | | | |

1, 2 எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 22nd day of January 2026.

**<u>முதல் விசாரணை</u>**– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 03.29 )

நான் தற்போது அரியலூர் மாவட்டம் பெரிய ஆத்துக்குறிச்சி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் வீட்டை நிர்வாகம் செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன சாந்தி எனது அம்மா. அ.சா.1 எனது மாமா. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எனது அப்பா 25 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். எனது அம்மா ஏற்கனவே அ.சா.1டன் தங்கி இருந்தார். அ.சா.1–ன் மனைவிக்கும் எனது அம்மாவிற்கும் சண்டை வந்ததால் விருத்தாசலத்தில் வாடகை வீட்டில் தங்கியிருந்தார். எனது அம்மா வருமானத்திற்காக ஜெயா மெடிக்கலில் வேலை செய்ததாக சொன்னார். எனது அம்மா சிறிது நாட்கள் உடல்நிலை

சரியில்லாமல் வீட்டில் தான் இருந்தார். அதன்பிறகு பிரச்சனை இருந்ததால் எனது பெரிய மகன் ஜாதகத்தை கொடுத்து பார்க்கசொல்லியிருந்தேன். 1–ம் எதிரி அதற்கு ஜாதகத்தை பார்த்தால் தெரியாது கையை பார்த்தால்தான் தெரியும் என்று சொன்னார். கிளி ஜோசியகாரர் தெருவில் ஒருவர் இருக்கிறார் என்றும் நீ வந்து பார்த்துவிட்டு போ என்று என் அம்மா என்னிடம் சொன்னார். அப்போது நான் போனேன். அப்போது 1–ம் எதிரி என் கையை பார்த்துவிட்டு கொஞ்ச நாள் இப்படி தான் இருக்கும். பின்னர் சரியாகிவிடும் என்று சொன்னார். அதன்பிறகு நான் வந்துவிட்டேன். அதன்பின்னர் எனது அம்மா போன் செய்து தீபாவளிக்கு எனது பசங்களுக்கு டிரெஸ் எடுப்பதற்காக வர சொல்லி இருந்தார். அதற்கு மறுநாள் காலை 06.00 மணிக்கு எனக்கு அ.சா.1 போன் செய்து எனது அம்மா இறந்துவிட்டதாக சொன்னார். நானும் எனது கணவரும் காலை 09.00 மணி அளவில் நான் எனது அம்மா இறந்து இடந்த விருத்தாசலம் வீட்டிற்கு சென்று பார்த்தேன். எனது அம்மாவிற்கு கழுத்து பகுதி, முதுகு பகுதி ஆகிய இடங்களில் காயம், ரத்தம் இருந்தது. அதன்பிறகு எனது மாமாவை காவல்நிலையத்திற்கு கூட்டிச்சென்று புகார் கொடுத்தோம். எனது அம்மா இருந்த வீட்டில் தான் 1–ம் எதிரி எனக்கு ஜாதகம் பார்க்கும்போது இருந்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

போலிசார் என்னை எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் நான் 06.00 மணிக்கு தகவல் கேட்டு 08.30 மணிக்கு போனபோது நான் போனவுடன் என்னை விசாரித்தார்கள். அதன்பிறகு எப்போது விசாரித்தார்கள் என்றால் காவல்நிலையத்திற்கு வரவழைத்து 10.00 அல்லது 11.00 மணிக்கு விசாரித்தார்கள். எனது அம்மாவுடன் வேறு யாரும் தங்கியிருந்தார்களா என்றால் இல்லை. எனது அம்மா மட்டும் தான் தங்கியிருந்தார். எனது அம்மா உடலில் நகை இருந்ததா என்றால் காதில் ஜிமிக்கி மட்டும் இருந்தது. சம்பவ இடத்திற்கு வருவதற்கு முன்பு போலிசார் எனக்கு போன் செய்தார்களா என்றால் இல்லை. எனது மாமா தான் போன் செய்தார். நபிஷா பேகம் , ஆண்டாள் ஆகியோர் நான் எனது அம்மாவை

போய் பார்க்கும்போது இருந்தார்களா என்றால் இல்லை. நான் போனபிறகு போலிசார் வந்தார்களா அதற்கு முன்பே இருந்தார்களா அதற்கு முன்பே இருந்தார்கள். போலிசார் என்னிடம் எனது அம்மாவுக்கு ஏற்பட்ட காயங்கள் கத்தியால் கழுத்தை அறுத்தால் ஏற்பட்ட காயங்கள் என்று சொன்னார்களா என்றால் சொன்னார்கள். நான் போகும்போது எனது மாமா அ.சா.1 அங்கு இருந்தாரா என்றால் இருந்தார். போலிசார் சம்பவ இடத்தில் என்னையும் அ.சா.1–யும் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். எனது அம்மா இறந்து கிடந்த இடத்தில் கையெழுத்து வாங்கினார்களா என்றால் இல்லை. எனது அம்மா இறந்து கிடந்த இடத்தில் ஒரு ஆணின் சட்டை இருந்ததா என்றால் இருந்தது. ரத்தக்கரையுடன் இருந்தது. எனது அம்மா என்ன வேலை செய்கிறார் என்று போலிசார் என்னை விசாரிக்கும்போது நான் சொன்னேனா என்றால் மெடிக்கல் ஷாப்பில் வேலை செய்ததாகவும் அதன்பிறகு உடல்நிலை சரியில்லாமல் போகாமல் இருந்ததாகவும் சொன்னேன். எனக்கு 1–ம் எதிரி கைரேகை பார்த்ததாக நான் சொன்ன விவரத்தை போலிசாரிடம் சொன்னேனா என்றால் இல்லை. எனது மகனின் ஜாதகத்தை 1–ம் எதிரி பார்த்ததாக நான் சொல்வது எங்கு வைத்து பார்த்தார் என்று கேட்டால் எனது அம்மா வீட்டின் தாழ்வாரத்தில் தான் வைத்து பார்த்தார். எனது அம்மா இறப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு பார்த்தார். 1–ம் எதிரி ஜாதகம் பார்க்கும் ஆள் இல்லை என்றால் கிளி ஜோசியம் பார்க்கும் நபர் தான். ஆனால் எனது அம்மா ஜாதகத்தை கொடுத்தால் பார்ப்பார் என்று சொன்னார். நான் சொல்வது போல 1–ம் எதிரி எனது அம்மா வீட்டிற்கு வந்தது இல்லை என்றும் எனது அம்மாவை பார்த்தது இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு எதிரிகள் மீது போட்டுள்ளதால் 1–ம் எதிரி எனது அம்மா வீட்டிற்கு வந்ததாக நான் புதிதாக கதை சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் எனது அம்மாவின் இறப்பிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் எதிரிகள் அடிக்கடி எனது அம்மா வீட்டிற்கு வந்து கொண்டு இருந்ததாக என்னிடம் சொன்னார்கள். 2–ம் எதிரியை நான் இதுவரை பார்த்தது இல்லை என்றால் சரிதான். எனது அம்மாவிற்கு நெருங்கிய நண்பர் முருகன் இருந்தாரா என்று கேட்டால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1–ம் எதிரி எனது அம்மா வீட்டிற்கு வந்தது இல்லை என்றும் நான் அவரை பார்த்தது இல்லை

என்றும் நான் முருகன் என்பவருக்கு பதிலாக தவறாக 1–ம் எதிரியை பார்த்தாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை.

(முடிக்கப்பட்ட நேரம் 03.50 )

2026 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 22 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.